## அரிய பழங்கள் விளைச்சல் அமோகம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,00:00 IST



சேலம்: இம்மாவட்டத்தில் உள்ள கொளத்தூர், பாலமலை, சேர்வராயன்மலை, பனைமரத்துப்பட்டி சந்துமலை, சின்னகல்லார் ஆகிய இடங்களில், மிகவும் அரிதான காரை, விளான், சொத்துக்கிலா, இலந்தை பழங்கள் ஏராளமாக விளைகின்றன. வன விலங்குகள் விரும்பி உண்ணும் இப்பழங்கள் மனிதர்களின் விருப்பமாகவும் உள்ளன. இம்மலைப் பகுதிகளில் பழமரங்கள் மட்டுமல்லாமல், சந்தனம், மூங்கில், சிவப்பு சந்தனம், வாகை உள்ளிட்ட உயர்ரக மரங்களும் ஏராளமாக உள்ளன. துளசி, கறிவேப்பிலை, கற்றாழை, கடுக்காய் போன்ற மூலிகைகளும் இங்கு அதிகம். சமீபத்தில் பெய்த தொடர் மழையால், நீரோடைகள், பாலிகள், சுனைகள், குட்டைகளில் மழை நீர் தேங்கியுள்ளது. இதனால், பச்சை பசேலென காட்சியளிக்கும் இந்த மலை கிராமங்கள், பார்வையாளர்களின் கண்களுக்கு பசுமை விருந்தளிக்கின்றன.

## இனி பெண்களும் மரம் ஏறலாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,00:00 IST



கோவை: உயரமாக வளரும் பனை, தென்னை, தேக்கு, குமிழ், மலைவேம்பு, சில்வர் ஓக் போன்ற மரங்களில் அறுவடை, பராமரிப்பு செய்ய கூலி ஆட்கள் பற்றாக்குறை நிலவுகிறது. மேலும், தற்போதுள்ள முறையில், கால் மற்றும் இடுப்பில் கயிற்றை கட்டிக் கொண்டு, மரத்தோடு நெஞ்சை உரசியபடி, கைகளால் மரத்தை கட்டிப்பிடித்து மரம் ஏற வேண்டியுள்ளது.
இந்நிலையில், மரம் ஏறுவதற்கு ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கருவியின் உதவியுடன் பழக்கமில்லாதவர்கள், பெண்கள், சிறுவர்கள் கூட மரம் ஏறலாம். குறைந்த எடை கொண்ட இக்கருவியை, எளிதாக எங்கும் எடுத்துச் செல்லலாம். பாதுகாப்பானது.  அதிகபட்சமாக 70 கிலோ எடையை தாங்கும். மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இக்கால கட்டத்தில், இக்கருவி விவசாயிகளுக்கு வெகுவாக உதவும்.

**தொடர் மழை எதிரொலி: கடலூர் மாவட்டத்தில் நெல்விலை வீழ்ச்சி**

First Published : 17 Sep 2010 12:00:00 AM IST



கடலூர், செப். 16: கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக நெல் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

÷கடலூர் மாவட்டத்தில் டெல்டா பாசனப் பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரிலும் மற்ற பகுதிகளில் 45 ஆயிரம் ஏக்கரிலும் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டு இருந்தது. தற்போது 90 சதவீதம் அறுவடை முடிந்து விட்டது. விவசாயிகள் சம்பா நெல் சாகுபடிக்குத் தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள்.

÷தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் ஏடிடி 43, டீலக்ஸ், ஏடிடி 36, ஏஎஸ்பி 16, ஏஎஸ்பி 16, கோ 43, ஜேஎல் உள்ளிட்ட குறுவை ரகங்களும், பொன்னி, பிபிடி போன்ற இருப்பு வைக்கப்பட்டு இருந்த சம்பாநெல் ரகங்களும் விற்பனைக்கு வந்து கொண்டு இருக்கின்றன.

÷இவை பெரும்பாலும் நேரடியாகத் தனியார் வியாபாரிகளிடமும், மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் விற்னைக்கு வந்து கொண்டு இருக்கின்றன. புதன்கிழமை விருத்தாசலம் ஒழுங்குமுறை முறை விற்பனைக் கூடத்துக்கு 6 ஆயிரம் மூட்டைகளும் பண்ருட்டி, கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தலா 500 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.

÷நெல் விலை குவிண்டால் விருத்தாசலத்தில் குறைந்தபட்சம் ரூ. 780 ஆகவும், அதிகபட்சம் ரூ. 1,080 ஆகவும் இருந்தது. பண்ருட்டியில் குறைந்த பட்சம் ரூ. 790 ஆகவும், அதிகபட்சம் ரூ. 1,113 ஆகவும் இருந்தது. கடலூரில் குறைந்தபட்ச விலை ரூ. 615 ஆகவும் அதிகபட்ச விலை ரூ. 910 ஆகவும் இருந்ததாக மார்க்கெட் கமிட்டி தெரிவிக்கிறது.

÷அரசு கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் விலை குவிண்டால் சன்ன ரகம் ரூ. 1,100 ஆகவும், சாதாரண ரகம் ரூ. 1,050 ஆகவும் உள்ளது. எனினும் அரசு கொள்முதல் நிலையங்களுக்கு நெல்வரத்து குறைவாகவே இருப்பதாக கொள்முதல் நிலையங்கள் தெரிவிக்கின்றன.

÷காரணம் தற்போது கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை. பல இடங்களில் வயல்களில் தண்ணீர் தேங்கி, இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாத நிலை இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். மேலும் அறுவடை செய்தாலும் நெல்லை உலர்த்த முடியவில்லை. அரசு கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் வரை மட்டுமே ஈரப்பதம்

அனுமதிக்கப்படும். மேலும் களத்தில் என்னதான் நெல் தூற்றப்பட்டு இருந்தாலும், அரசு கொள்முதல் நிலையங்களில் மீண்டும் தூற்ற வேண்டும் என்று கொள்முதல் நிலைய அலுவலர்கள் வற்புறுத்துகிறார்கள்.

÷இத்தகைய காரணங்களால் விவசாயிகள் அரசு கொள்முதல் நிலையங்களுக்கு செல்லாமல், நேரடியாகத் தனியார் வியாபாரிகளையும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும் நாடுகிறார்கள். சம்பா அறுவடையின் போது, களத்துக்கு நேரடியாகச் சென்று கொள்முதல் செய்யும் முறை, நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் குறுவை அறுவடையில் அவ்வாறு இல்லை.

÷இதனால் குறைந்த விலைக்கு நெல்லை விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷இதுகுறித்து கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், ""கடந்த ஆண்டு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 20 சதவீதம் வரை ஈரப்பதம் அனுமதிக்கப்பட்டது. ஆனால் தற்போது 17 சதவீதம் வரை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

÷மழைக் காலங்களில் சிறப்பு ஏற்பாடாக, ஈரப்பதம் 20 சதவீதம் வரை அனுமதிக்க வேண்டும். கிராமங்களில் வாய்ப்பு இருக்கும் இடங்களில் அரசு உலர்களங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். சம்பா அறுவடையில் செயல்படுத்தியது போல், குறுவை அறுவடையிலும் களத்துக்கு வந்து நெல் கொள்முதல் செய்யும் முறை வேண்டும். அரசு நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்'' என்றார்.

**தென்னையில் சிவப்பு கூன்வண்டு தாக்குதல்**

First Published : 16 Sep 2010 02:19:53 PM IST

ஆறுமுகனேரி,செப்.15: தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி வட்டாரத்தில் சிவப்பு கூன்வண்டுகள் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது.அதைக் கட்டுப்படுத்திட வேளாண் துறையினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

இது தொடர்பாக உடன்குடி வேளாண் உதவி இயக்குநர் த.பாரதி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

உடன்குடி வட்டாரத்தில் ஒரு சில தென்னந்தோப்புகளில் சிவப்பு கூன் வண்டுகளின் தாக்குதல் காணப்படுகிறது. இந்த வண்டுகளின் புழுக்கள் மரத்தின் தண்டுப் பகுதி மற்றும் கொண்டைப் பகுதியை சேதப்படுத்துகிறது.

புழுக்கள் தாக்கிய பகுதியிலிருந்து பழுப்பு நிறச்சாறு வடியும். புழுக்கள் சாப்பிட்ட சக்கைப் பகுதி வெளியே தள்ளும். மரத்தின் உள்பகுதியில் அழுகிய துர்நாற்றம் வீசும். கொண்டைப் பகுதியில்

தாக்குதல் காணப்பட்டால் குருத்தின் மட்டைகளும் வாடிவிடும். தாக்குதல் அதிகமாக இருந்தால் கொண்டைப் பகுதி காய்ந்து விடும்.

தாக்கப்பட்ட மரத்தை வெட்டிப் பார்த்தால் மரத்தின் தண்டுப் பகுதியில் அதிகமாக புழுக்களும், சக்கைகளும் இருப்பதைக் காணலாம். புழுக்கள் வெளிறிய மஞ்சள் நிறமாக காணப்படும்.

இந்த புழுக்களின் தாய் வண்டுகள் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக காணப்படும். வாய்ப் பாகம் நீண்டு வளைந்து காணப்படும். சிவப்பு கூன்வண்டு தாக்கி பட்டுப் போன மரங்களை அப்புறப்படுத்தி எரித்து விட வேண்டும். தோப்புகளில் உள்ள மரங்களின் பச்சை ஓலைகளை வெட்டக் கூடாது. மரங்களில் அரிவாளால் வெட்டி சேதப்படுத்தக்கூடாது.

தாக்கப்பட்ட தென்னை மரங்களில் சிகப்பு கூன்வண்டுகளைக் கட்டுப்படுத்திட வேர் மூலம் மருந்து செலுத்திட வேண்டும். மானோகுரோட்டபாஸ் 20 மிலி மருந்தை 20 மிலி தண்ணீரில் கலந்து, பாலிதீன் பையில் இட்டு தென்னை மரத்தின் இளம் வேரின் நுனியை சீவி அதில் மருந்தினை கட்டி விட வேண்டும்.

6 மணி நேரத்தில் மருந்தை உறிஞ்சிவிடும். அவ்வாறு உறிஞ்சாவிட்டால் மற்றொரு வேரை தேர்வு செய்து கட்ட வேண்டும். மருந்து கட்டும் முன் ஒரு நாளும், கட்டிய பின் ஒரு நாளும் மரத்துக்கு தண்ணீர் பாய்ச்சக் கூடாது.

மருந்து கட்டிய மரத்தில் இளநீர் பறிக்கக் கூடாது. 45 நாள்கள் கழித்துதான் தேங்காய் பறிக்க வேண்டும் என்றார் அவர்.

**எள் சாகுபடி செய்யும் முறை**

First Published : 16 Sep 2010 02:19:37 PM IST

திருநெல்வேலி, செப். 15: எள் சாகுபடிக்கு, எள்ளுக்கு ஏழு உழவு என்ற பழமொழிக்கு ஏற்ப புழுதிபட நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். கடைசி உழவின்போது 5 டன் நன்கு மக்கிய தொழு உரத்தை இட வேண்டும். விதைப்புக்கு ஏற்ற உழவு செய்து முடித்ததும் அடியுரமாக 9.2,5.2,5.2 என்ற அளவில் தழை,மணி,சாம்பல் சத்துக்கள் இட வேண்டும்.

இதற்கு தேவையான உரங்களான 30 கிலோ யூரியா,32 கிலோ சூப்பர் பாஸ்பேட், 8 கிலோ பொட்டாஷ்,11 கிலோ டி.ஏ.பி., 15 கிலோ யூரியா ஆகியவற்றை இட வேண்டும்.

ஏக்கருக்கு 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம்,4 பாக்கெட் பாஸ்போபேக்டீரியா ஆகியவற்றை 3 அல்லது 4 கூடை நன்கு மக்கிய தொழுஉரத்துடன் கலந்து எள் விதைப்பதற்கு முன் சீராக தூவ வேண்டும். விதைப்புக்கு முன்பு ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட் நுண்ணூட்ட உரத்தை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும்.

முன்னதாக ஏக்கருக்கு 2 கிலோ டிஎம்வி - 3 ரக எள் விதையை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைகோடெர்மா விரிடி கலந்து பூஞ்சான விதை நேர்த்தி செய்து, விதை மூலம் பரவும் வேரழுகல்,வாடல் நோய்களைத் தவிர்க்கலாம்.

விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான 2 கிலோ விதையுடன் ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் கலவையை தேவையான ஆறிய வடி கஞ்சியில் கலந்து விதையுடன் நன்றாக கலக்க வேண்டும். பின்னர் 15 நிமிஷங்கள் நிழலில் அதை உலர வைத்து விதையுடன் தேவையான மணல் கலந்து நிலத்தில் சீராக தூவி விதைக்க வேண்டும்.

விதைத்த 15 ம் நாள் செடிக்கு செடி 15 செ.மீ. இடைவெளியிலும், 30 ம் நாள் 30 செ.மீ. இடைவெளியிலும் பயிர் கலைத்தல் வேண்டும். ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் 11 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும். விதைத்த 7 நாள்கள் கழித்தும் 35 - 45 நாள்களில் பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களிலும் நிலத்தில் போதிய நீர் இருக்க வேண்டும்.

பூச்சிநோய் தாக்குதல் தென்படின் அதற்கேற்ப உரிய பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டும். காய்கள் நன்கு முற்றியவுடன் அறுவடைசெய்ய வேண்டும். தண்ணீர் பற்றாக்குறையான இடங்களில் மட்டுமன்றி கிணற்று பாசன பகுதிகளிலும் எள் சாகுபடியை மேற்கொள்ளலாம். எள்ளுக்கு அதிகபட்ச விலை கிடைப்பதால்,அதிக லாபமும் பெறலாம்.

இத் தகவலை திருநெல்வேலி வேளாண்மை இணை இயக்குநர் ச.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**விவசாயிகள் உண்மை விவரங்களை அளிக்க வேண்டும்**

First Published : 16 Sep 2010 01:08:01 PM IST

அரியலூர், செப். 15: ஏழை விவசாயிகளுக்கு இலவச மின் மோட்டார் வழங்குவது தொடர்பாக அரசு கோரியிருக்கும் விண்ணப்பப் படிவத்தில் விவசாயிகள் உண்மை விவரங்களையே அளிக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஏழை விவசாயிகளுக்கு இலவச மின் மோட்டார் வழங்கும் திட்டம் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆட்சியர் மேலும் பேசியது:

தமிழக அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அந்த வகையில், தற்போது ஏழை விவசாயிகளுக்கு இலவச மின் மோட்டார் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.

விவசாயிகள் பயன்படுத்தி வரும் மின் மோட்டார்கள் எல்லாம் பழையதாக உள்ளதால், அதன்மூலம் நீர் வெளியேற்றும் திறன் குறைவாக உள்ளது. இதைத் தவிர்க்கவே, பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக ஏழை விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் வழங்க உள்ளது.

விவசாயிகள் 5 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார் இணைப்புகளை பெற்று, தற்போது 7.5, 10 குதிரைத் திறன் மோட்டார்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். நீங்கள் இவ்வாறு பயன்படுத்தி வந்தாலும், மின்வாரிய அதிகாரிகளின் கணக்கெடுப்பு விவரங்கள் கூறும் போது உண்மையான விவரங்களை அளிக்க வேண்டும்.

அரியலூர் மாவட்டத்தில் 16,104 விவசாய மின் இணைப்புகள் உள்ளன. இதில் 11,82 மின் இணைப்புகளுக்குரிய கணக்கெடுப்புப் பணிகள் முடிந்துள்ளன. விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் வழங்குவது மூலம் 20 முதல் 30 சதம் மின்சாரத்தை சேமிக்க முடியும்.

மின்வாரிய அதிகாரிகள் இலவச மின் மோட்டார் வழங்குவது தொடர்பாக 23 கேள்விகளைக் கேட்டு விண்ணப்பப் படிவங்களை அளித்துள்ளனர். அந்தப் படிவத்தில் விவசாயிகள் உண்மையான விவரங்களை தெரிவிக்க வேண்டும். உண்மையான விவரங்களை தெரிவித்தால் மட்டுமே திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த முடியும் என்றார் ஆபிரகாம்.

இதில் தமிழ்நாடு மின்வாரிய கண்காணிப்புப் பொறியாளர் கிருபாகரன், செயற் பொறியாளர் விருத்தாசலம், உதவிச் செயற் பொறியாளர்கள் தெய்வேந்திரன், ராஜமாணிக்கம், பெஞ்சமின் நேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கரும்பு விவசாயிகள் நாளை ஆர்ப்பாட்டம்**

First Published : 16 Sep 2010 10:19:25 AM IST

விழுப்புரம், செப்.15: கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3 ஆயிரம் விலை கேட்டு சர்க்கரை ஆலைகள் முன்பு வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் வீ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதேபோல் கரும்பு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும் என்றும், இதற்காக முத்தரப்பு கூட்டத்தை அரசு நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப் போராட்டம் நடைபெறவுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, செஞ்சியில் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை முன்பு பி. வசுபாலன், முண்டியம்பாக்கத்தில் பி. சிவராமன், மூங்கில்துறைப்பட்டு அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்பு ஏ. ஜனார்த்தனன், நயினார்பாளையம் ஏ. சித்தூர் ஆரூரான் சர்க்கரை ஆலை முன்பு பி.எம். சுப்ரமணி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

**விதை நெல் விற்பனையில் விவசாயிகள் ஆர்வம்**

First Published : 16 Sep 2010 01:39:03 PM IST

கோபி, செப்.15: கோபியில் விவசாயிகள் விதை நெல்லாக அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

வட மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளதால் கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனப் பகுதியில் முதல் போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட 30 சதவீதம் நெல் விதை நெல்லாக அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பவானிசாகர் அணையில் இருந்து கொடிவேரி அணை மூலம் கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு ஏப்ரல் மாதம் 16ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது முதல்போக சாகுபடியில் நெல் அறுவடை முடிவடைந்துள்ளது, முதல் போகத்தில் ஏ.டி.டி 43, 45 மற்றும் இட்லி குண்டு ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டன.

வடமாநிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் ரகங்கள், கடந்த சில மாதங்ளாக தமிழகத்துக்கு அதிகளவில் கொண்டு வரப்படுகிறது. உள்ளூர் நெல் வியாபாரிகளிடையே கோபி அரக்கன்கோட்டை மற்றம் தடப்பள்ளி பாசனப் பகுதி முதல் போகத்தில் விளைந்த நெல்லுக்கு எதிர்பார்த்த கிராக்கி இல்லை.

கடந்தாண்டு முதல் போகத்தில் விளைந்த இட்லி குண்டு ரகத்துக்கு வியாபாரிகளிடயே நல்ல போட்டி இருந்தது. இதனால் நடப்பு முதல் போகத்தில் இட்லி குண்டு ரக விதை நெல்லை அதிக விலை கொடுத்து வாங்கி, கோபி விவசாயிகள் பயிரிட்டனர். ஆனால் வெளிமாநிலங்களில் இருந்து வரத்து அதிகரித்ததால் உள்ளூர் இட்லி குண்டு ரகத்துக்கு விவசாயிகள் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை.

எனினும் ஒரு பொதி (264 கிலோ) இட்லி குண்டு ரக விதை நெல்லுக்கு 3,000, ஏ.டி.டி 43,45 ஆகிய ரகங்களுக்கு 2,300 முதல் 2,500 வரை விலை கிடைக்கிறது.

இதனால் முதல் போகத்தில் விளைந்த நெல்லை விதை நெல்லாக விற்பனை செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தினமலர்

**3 கிலோ எடை ராட்சஷ காளான் ஆண்டுதோறும் வளரும் அதிசயம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,02:31 IST

மேட்டூர்: மேட்டூர் அடுத்த வீரக்கல் கிராமத்தில் ஆண்டுதோறும் மழைக்காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் ராட்சஷ காளான்கள் வளர்வது அப்பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகா, வீரக்கல் பஞ்.,ல் உள்ளது செங்குட்டை கிராமம். கிராமத்தில் உள்ள ஒரு தென்னந்தோப்பில் பருவமழை காலத்தில் குறிப்பிட்ட ஒரு

இடத்தில் மட்டும் ராட்சஷ காளான்கள் வளர்கிறது. ஆண்டில் அதிகபட்சம் மூன்று கிலோ எடை கொண்ட  நான்கு காளான் வளர்கிறது.இது குறித்து செங்குட்டைகாடு கிராமத்தை சேர்ந்த சித்த மருத்துவர் செல்லமுத்து கூறுகையில், ""எங்கள் வீட்டின் அருகிலுள்ள தென்னந்தோப்பில் ஆண்டுதோறும் பருவமழை சீஸனில் மட்டும் மூன்று கிலோ எடையுள்ள ராட்சஷ காளான் வளர்கிறது. தொடர்ந்து மூன்று முதல் நான்கு நாட்கள் வரை அதிகபட்சம் நான்கு காளான் வளர்கிறது. அதன் பின்னர் அடுத்த ஆண்டுதான் அதே இடத்தில் காளான் வளர்கிறது.

""நேற்று முன்தினம் 2 கிலோ எடையுள்ள ஒரு காளானை பறித்து சமைத்து சாப்பிட்டோம். நேற்று அதே இடத்தில் மூன்று கிலோ எடையுள்ள ஒரு காளான் வளர்ந்தது. அந்த காளானையும் சமைப்பதற்காக பறித்துள்ளோம். கடந்த எட்டு ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும் பருவமழை சீஸனில் ராட்சஷ காளான் வளர்கிறது," என்றார்.மேட்டூர் சித்தா மூலிகை தோட்டத்தை சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சி அலுவலர் சொர்ண சுப்ரம ணியம் கூறுகையில், ""மக்கி போன இலை, தழைகள் அதிகமாக தேங்கும் இடத்தில் அபூர்வமாக ஐந்து கிலோ எடை கொண்ட காளான்கள் மழை காலத்தில் வளரும். வெள்ளை நிறத்தில் காணப்படும் காளான்களை சமைத்து சாப்பிடலாம்.""மஞ்சள், கருஞ்சிவப்பு நிறமாக வளரும் காளான்கள் விஷத்தன்மை வாய்ந்தவை. அந்த காளான்களை சாப்பிடக்கூடாது. வெள்ளை நிற காளான்களில் மேற்பகுதியில் பூஞ்சைகள் இருந்தால் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்," என்றார்.செங்குட்டைகாடு கிராமத்தில் செல்லமுத்து பறித்து வந்த ராட்சஷ காளான்களை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

**தோட்டக்கலை பயிர்களுக்கு 65 சதம் மானியம் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,03:16 IST

நாமக்கல்: "அனைத்து தோட்டக்கலை பயிர்களுக்கும் சாகுபடி இடைவெளியை பொறுத்து அரசு விதிமுறைகளை பின்பற்றி மொத்த மதிப்பில் 65 சதவீதம் மானிய உதவியுடன், 5 ஹெக்டேர் வரை சொட்டுநீர் பாசன அமைப்பு ஏற்படுத்திக் கொள்ளலாம்' என, தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் தனகோபாலன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்த மாவட்ட தோட்டக்கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு மானியத் திட்டங்கள் 2010-11ம்  நிதியாண்டில் செயல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மூலம் அனைத்து

வகையான பழச்செடிகள் 50 சதவீத மானியத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கும், காய்கறி விதைகள் 50 மானியத்தில் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 50 ஹெக்டேருக்கும் வினியோகம் செய்யப்படுகிறது.கொல்லிமலை வட்டாரத்தில் மட்டும் மலைவாழ் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மலைவாழ் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் பரப்பிற்கு தேவைப்படும் பழச்செடிகள் 75 சதவீத மானியத்திலும், 500 ரூபாய் மதிப்புள்ள காய்கறி விதைகள் 90 சதவீத மானியத்திலும் வினியோகம் செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், பயிர் பாதுகாப்பு கருவிகள் 75 சதவீதம் மானியத்திலும், தெளிப்பு நீர்ப்பாசனக்கருவி 90 சதவீத மானியத்திலும் வழங்கப்படுகிறது. நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்படும் அனைத்து தோட்டக்கலை பயிர்களுக்கும் சாகுபடி இடைவெளிக்கு தகுந்தவாறு அரசு விதிமுறைகளை பின்பற்றி மொத்த மதிப்பில் 65 சதவீத மானிய உதவியுடன், அதிகபட்சமாக ஒரு பண்ணைக் குடும்பத்துக்கு 5 ஹெக்டேர் வரை சொட்டுநீர் பாசன அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.உயர் தொழில் நுட்ப உற்பத்தி பெருக்கத் திட்டத்தின் கீழ், அடர் நெருக்கி நடவு முறையில் சாகுபடி செய்யப்படும் மா பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு 50 சதவீத மானியமாக 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 50 சதவீத மானியமாக 50 ஆயிரம் ரூபாய் மலர்கள், வாசனை திரவியப் பயிர்கள், மலை தோட்டப் பயிர்கள் மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் பரப்பை அதிகப்படுத்த 50 சதவீத மானியமாக ஒரு ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் மதிப்புள்ள இடு பொருள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயிரிடப்படும் பயிர்களுக்கு சொட்டுநீர்ப்பாசனம் அமைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசின் மானியத் திட்டங்கள் மூலம் பயன்பெறும் விவசாயிகள் அந்தந்த வட்டார தலைமையிட வேளாண் விரிவாக்க மையங்களில் செயல்பட்டு வரும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இழுத்தடிக்கும் வேளாண் மையம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,03:07 IST

தாராபுரம்: தாராபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகள், மானிய விலையில் விதைகள் வழங்காமல் இழுத்தடிக்கப்படுகிறது.தாராபுரம்,

மூலனூர், குண்டடம் யூனியன் விவசாயிகளின் நலன் கருதி தாராபுரத்தில் வேளாண் விரிவாக்கம் மையம் இயங்குகிறது. உதவி வேளாண் அலுவலர் தலைமையில் 20க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். இவர்கள் விவசாயிகளின் விளை நிலங்களுக்குசென்று பருவத்திற்கு ஏற்ற விவசாயம் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கவேண்டும்.
நெல், நிலக்கடலை, பருத்தி, எள், தென்னை ஆகியவற்றின் விதைகளை குடோன்களில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவேண்டும். வேளாண்மை விரிவாக்க மையத்தில் விதைகள் வாங்கிச் செல்லும்  விவசாயிகளின் விளை நிலங்களுக்கு களப்பணியாளர்கள்  சென்று பயிர் வளர்ச்சிக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கவேண்டும்.அப்பாவி விவசாயிகள் தனியார் விதை வியாபாரிகளின் ஆலோசனையில் பயிர் செய்யும் போது சாகுபடிச் செலவு கூடுதலாகிறது. ஒரு சில விதை வியாபாரிகள் தங்கள் சொந்த லாபத்துக்காக பல்வேறு வகையான பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தக் கூறி, ஆயிரக்கணக்கில் விவசாயிகளிடம் பணம் பறிக்கின்றனர்.
தமிழகரசு விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகள் என்ன, பருவ நிலைக்கு ஏற்ற பயிர்கள் என்ன என்பது குறித்து களப்பணியாளர்கள் விவசாயிகளின் விளைநிலங்களுக்குசென்று ஆலோசனை வழங்கவேண்டும். ஆனால், அப்படி ஏதும் நடப்பதில்லை.விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்க மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பயறு வகை பயிர் அதிக வருவாய் தரும்: வேளாண் அதிகாரி பேச்சு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,21:16 IST

அன்னூர் : "பயறு வகை பயிரிட்டால் அதிக வருமானம் பெறலாம்' என, வேளாண் அதிகாரிகள் பயிற்சி முகாமில் தெரிவித்தனர்.
அன்னூர் வட்டாரத்தில் 3,750 ஏக்கரில் பயறு வகைகள் பயிரிடப்படுகிறது. பயறு பயிரிடும் பரப்பு மற்றும் உற் பத்தி திறனை அதிகரிக்க தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.  இத்திட்டத்தில் ஓரைக்கால்பாளையத்தில் வயல்வெளிப் பள்ளி துவக்க விழா நேற்று முன் தினம் நடந்தது. துணை வேளாண் அலுவலர் ரங்கராஜ் வரவேற்றார்.
விதை அலுவலர் சுந்தரவடிவேல் பேசுகையில்,""விதைப் பண்ணை அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. தரமான விதைகளை பயன்படுத்துவதன் மூலம் நல்ல விளைச்சல் பெற முடியும்," என்றார்.
வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார் பேசியதாவது: அன்னூர் பகுதியில் 2,250 ஏக்கரில் பாசிப்பயறும், 1,500 ஏக்கரில் துவரை, தட்டை, உளுந்து ஆகிய பயறு வகைகளும் பயிரிடப்படுகிறது. 90 சதவீதம் மானாவாரியாகவும், 10 சதவீதம் மட்டும் கிணற்றுநீர் மூலமும் விளைவிக்கப்படுகிறது. சில ஆண்டுகளாக தேசிய அளவில் பயறு வகை பயிரிடப்படுவது

குறைந்து வருகிறது. தேவை அதிகரித்து வருகிறது. பயறு வகைகளின் விலை அதிகரித்துள் ளது. பயறு பயிரிடும் பரப்பை அதிகரிக்க உயிர் உரங்கள் மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து தரமான விதைகள் வெளிமார்க்கெட் விலையை விட கிலோவுக்கு 20 ரூபாய் அதிகமாக கொள்முதல் செய்யப்படும். விசை தெளிப் பான் அல்லது பம்புசெட் வாங்க பத்தாயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. வயல்வெளிப்பள்ளியில் தேர்வு செய்யப்பட்ட 30 விவசாயிகளுக்கு 20 வகுப்புகள் மூலம் பல்வேறு தொழில்நுட்பங்கள் கற்றுத்தரப்படும். இதில் பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகளே மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர். இவ்வாறு விஜயகுமார் பேசினார்.

முன்னோடி விவசாயி காளியப்பன் பேசுகையில்,""விவசாயிகள் நன்மை தரும் பூச்சிகள், தீமை தரும் பூச்சிகள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். தட்டான், பூச்சி தட்டான், பொறி வண்டு, சிலந்தி ஆகிய பூச்சிகள் நன்மை தரும். இவற்றை அழிக்கக்கூடாது,'' என்றார்.

வேளாண் அலுவலர் சீனிராஜ் பேசுகையில்,""பயறு வகைகளை பயிரிடுவதன் மூலம் குறுகிய காலத்தில் லாபம் பார்க்கலாம். அடுத்ததாக காரேகவுண்டன்பாளையத்திலும் வயல்வெளிப்பள்ளி துவக்கப்படுகிறது,'' என்றார்.

உதவி வேளாண் அலுவலர்கள் பிரவீண் குமார், வேல்முருகன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**நெல்லிக்காயில் உணவு பொருள் தயாரிக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2010,02:59 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில், நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க, பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை: பல்கலையில் "நெல்லிக்காயில் இருந்து மதிப் பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு' குறித்த பயிற்சி, 21, 22ம் தேதிகளில் நடக்கிறது. பயிற்சியில், நெல்லி கலவை பானங்கள், சர்க்கரைப் பாகு, கேண்டி மிட்டாய் மற்றும் துருவல், தயாரித்த பொருட்களை சுகாதார முறையில் அடைத்தல், தொழில் துவக்குவதற்கான உரிமம், பொருட்களை விற்பனை செய்வதற்கான வங்கி கடன் வசதி பெறுதல் குறித்த விபரங்களுடன் விற்பனை செய்யும் யுக்திகளும் கற்றுத்தரப்படுகிறது; பயிற்சி கட்டணம் 1,000 ரூபாய். ஆர்வமுள்ளவர்கள் பயிற்சிக்கட்டணத்தை

"முதன்மையர், வேளாண் இன்ஜினியரிங் மற்றும் ஆராய்ச்சி நிலையம்' என்ற பெயரில் கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தி, "பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோவை - 641 003' என்ற

முகவரிக்கு அனுப்ப வேண்டும். பயிற்சி கட்டணத்தை இதே முகவரியில் நேரில் செலுத் தியும் பதிவு செய்து கொள்ளலாம்; பதிவு செய்ய வரும் 20ம் தேதி கடைசி நாள். மேலும் விபரங்களுக்கு, 0422 - 661 1340, 661 1268 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**இந்திய தேயிலை உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 18 சதவீதம்!**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,03:27 IST

குன்னூர் : "கடந்த 2009-"10ம் ஆண்டு, இந்திய தேயிலை உற்பத்தியில் தென் மாநிலங்களின் பங்களிப்பு 26 சதவீதம்; தமிழகத்தின் பங்களிப்பு 18 சதவீதமாக இருந்தது; தேயிலைத் தூளின் மதிப்பும் கணிசமாக உயர்ந்துள்ளது' என "உபாசி' தெரிவித்துள்ளது.
தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் (உபாசி) சார்பில் வெளியிடப்பட்டுள்ள தோட்டப்பயிர் சாகுபடி செய்திக்குறிப்பு: கடந்த 2009-"10ம் ஆண்டு, அகில இந்திய அளவில் 5 லட்சத்து 79 ஆயிரத்து 190 எக்டேர் பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகாவை உள்ளடக்கிய தென் மாநிலங்களில், ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 740 எக்டேர் பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது; இந்தியாவின் மொத்த தேயிலை சாகுபடி பரப்பளவில் இது 20.7 சதவீதம்.
தமிழகத்தில் மட்டும், 80 ஆயிரத்து 462 எக்டேர் பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது; மொத்த பரப்பளவில் இது 13.9 சதவீதம். 2008-"09ம் ஆண்டை விட சாகுபடி பரப்பு 814 எக்டேர் குறைந்துள்ளது. கேரளாவில் 37 ஆயிரத்து 137 எக்டேர், கர்நாடகாவில் 2 ஆயிரத்து 141 எக்டேர் பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
உற்பத்தி பங்களிப்பு உயர்ந்தது: கடந்த 2009-"10ல், இந்தியாவின் மொத்த தேயிலை உற்பத்தி 9 லட்சத்து 91 ஆயிரத்து 182 டன்னாக இருந்தது; இது 2008-"09ம் ஆண்டை விட சுமார் 19 லட்சம் கிலோ அதிகம்; தென் மாநிலங்களின் பங்களிப்பு 2 லட்சத்து 56 ஆயிரத்து 803 டன்; இது, 2008-"09ம் ஆண்டை விட சுமார் 18 ஆயிரம் கிலோ அதிகம். இந்தியாவின் மொத்த உற்பத்தியில் இது 25.9 சதவீதம்; தமிழகத்தின் பங்களிப்பு ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 767 டன்; மொத்த உற்பத்தியில் இது 18.1 சதவீதம்.
அண்டை மாநிலமான கேரளாவின் உற்பத்தி 71 ஆயிரத்து 741 டன்; மொத்த உற்பத்தியில் 7.2 சதவீதம் மட்டுமே; கர்நாடகாவின் மொத்த உற்பத்தி 6,295 டன்; மொத்த உற்பத்தியில் 0.6 சதவீதம் மட்டுமே.
**விற்பனை மதிப்பும் விர்ர்...**: கடந்த 2009-"10ம் ஆண்டு, இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் மொத்த மதிப்பு 11 ஆயிரத்து 291 கோடி ரூபாய்; இதில், தென்மாநில அளவில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் மதிப்பு 2,396 கோடி ரூபாயாக இருந்தது; 2008-09ல்,

இந்திய உற்பத்தியின் மொத்த மதிப்பு 9,239 கோடி ரூபாயாகவும், தென்மாநில தேயிலைத் தூளின் மதிப்பு 1,818 கோடி ரூபாயாகவும் இருந்தது. 2009-"10ல், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் மதிப்பு 1,652 கோடி ரூபாய்; 2008-"09ல் இதன் மதிப்பு 1,248 கோடி ரூபாயாக இருந்தது. கேரள மாநில தேயிலை உற்பத்தியின் மொத்த மதிப்பு 687 கோடி ரூபாய், கர்நாடக தேயிலை உற்பத்தியின் மதிப்பு 58 கோடி ரூபாயாக இருந்தது. இவ்வாறு, செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கொள்முதல் மைய விவகாரம் அங்கத்தினர்கள் ஆத்திரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,03:28 IST

மஞ்சூர் : மஞ்சூர் தனமந்தோரை கொள்முதல் மைய விவகாரத்தில் இழுபறி நீடிப்பதால், அங்கத்தினர்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

மஞ்சூர் அருகே தாய்சோலை பகுதியில், 50க்கும் மேற்பட்ட தேயிலை விவசாயிகள், மஞ்சூர் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் அங்கத்தினர்களாக உள்ளனர்; இப்பகுதியில் தேயிலை கொள்முதல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. பலரது தேயிலைத் தோட்டம், தாய்சோலையிலிருந்து 4 கி.மீ., தொலைவில் உள்ள தனமந்தோரை பகுதியில் உள்ளதால், பசுந்தேயிலை மூட்டைகளை, தாய்சோலைக்கு கொண்டு வருவதில் சிரமம் ஏற்படுகிறது.

தனமந்தோரை பகுதியிலும் கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டதால், கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை சார்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால், தாய்சோலை எஸ்டேட் நிர்வாகம் சார்பில், சாலைப் பகுதியில் "கேட்' அமைக்கப்பட்டதால், தனியார் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தனமந்தோரை அங்கத்தினர்கள், மாவட்ட கலெக்டர், குந்தா தாசில்தாரிடம் மனு அளித்தனர். குந்தா தாசில்தார் மற்றும் குன்னூர் ஆர்.டி.ஓ., தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும், பிரச்னைக்கு தீர்வு கிடைக்காததால், விரைவில் போராட்டம் நடத்த அங்கத்தினர்கள் முடிவு செய்துள்ளனர்.

**மானிய விலையில் விதை இடுபொருள் பெற அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,02:10 IST

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் வேளாண் உதவி இயக்குனர் (பொ) ரெங்கராசன் வெளியிட்ட அறிக்கை:தற்போது ஆற்றில் நீர்வரத்து வர துவங்கியுள்ளது. பருவமழையும் துவங்கியுள்ளது. எனவே, ஆற்றுப்பாசன விவசாயிகள் மற்றும் தோட்டக்கால் பகுதி விவசாயிகள்

இதை பயன்படுத்தி நெல் நடவு பணிகளை மேற்கொள்ளலாம்.நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேவையான மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, பீ.பி.டி.5204, ஏ.எஸ்.டி.19, ஏ.டி.டி.39 மற்றும் கோ-43 ரக நெல் விதைகள் மண்ணச்சநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவை விதைகிராம திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.
விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை பெற்று செம்மை நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்து இரட்டிப்பு மகசூல் பெறவும், தேவையான உயிர் உரங்களான அசோஸ்பயிரிலம், பாஸ்போபாக்டீரயா, ஜிப்சம் ஆகியவை 50 சதவீத மானிய விலையிலும் வழங்கப்படுகிறது.செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கம் அமைக்கும் விவசாயிகளுக்கு 3,000 ஆயிரம் மதிப்பு விதை, உயிர், உரம், நுண்ணூட்டம் உள்ளிட்ட இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் பயனடைய வேண்டும்.

**வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,01:58 IST

கரூர்: "பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி வரும் 20ம் தேதி நடக்கிறது' என, இணை பேராசிரியர் செந்தில்வேலன் அறிவித்துள்ளார்

அவர் வெளியிட்ட அறிக்கை:பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 20ம் தேதி வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி நடைபெறுகிறது. பயிற்சியில் வெண்பன்றி வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறை, விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, அத்துடன் களப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது.பயிற்சியில் கலந்து கொள்வோர் காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகம் வரவேண்டும். இது தொடர்பாக தகவல் தெரிந்து கொள்ள 294335 டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**புழுதேரியில் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,01:57 IST

குளித்தலை: குளித்தலை அடுத்துள்ள புழுதேரியில் வேளாண் விஞ்ஞானிகள், விரிவாக்க அலுவலர் மற்றும் விவசாயிகள் கருந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது.

வேளாண் இணை இயக்குனர் ஜெகதீசன் தலைமை வகித்தார். தொழில்நுட்ப வல்லுநர்கள் அனிதா தமிழ்ச்செல்வி, தனசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் கந்தசாமி வரவேற்றார். நிகழ்ச்சியை புழுதேரி சரஸ்வதி வேளாண்மை மையம் நிர்வாக இயக்குனர் ராமஜெயம் துவக்கி வைத்தார். நெல் மற்றும் பயறு வகை பற்றிய கலந்துரையாடல், செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து புழுதேரி சரஸ்வதி வேளாண்மை மைய ஒருங்கிணைப்பாளர் திரவியம் பேசினார்.

பயிர் சாகுபடி குறித்து சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் சகுந்தலை பேசினர். செம்மை கரும்பு சாகுபடி பற்றி சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையம் தலைவர் மனோகரன், நெல் மற்றும் பயறு வகை மற்றும் பயிர் பாதுகாப்பு குறித்து சரஸ்வதி தொழில் நுட்ப வல்லுநர்கள் விஜய், விதை தொழில் நுட்பம் குறித்து கரூர் வேளாண்மை துணை இயக்குனர் விஸ்வநாதன், மானியம் குறித்து கரூர் வேளாண்மை துணை இயக்குனர் சவுந்திரம் ஆகியோர் பேசினர்.தோகமலை வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) காதர் மோஹைதீன் நன்றி கூறினார்.

### குறுவை சாகுபடிக்கு தண்ணீர் தட்டுப்பாடு:600 கோடி ரூபாய் நெல் உற்பத்தி பாதிப்பு

பதிவுசெய்த நாள் : செப்டம்பர் 17,2010,03:02 IST

திருநெல்வேலி:மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் 8 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என தமிழ்நாடுவிவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுக்குழு கூட்டம் நேற்று நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் நடந்தது.

மாநில தலைவர் குணசேகரன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் துரைமாணிக்கம், மாநில துணைப்பொதுச்செயலாளர் பழனிச்சாமி உள்ளிட்டோர்பங்கேற்றனர். நெல்லை தாமிரபரணி ஆற்றில் ஆண்டுதோறும் மழைக்காலங்களில் 15 டி.எம்.சி.,தண்ணீர் வீணாகிறது. எனவே நெல்லை, தூத்துக்கடி மாவட்டங்களில் வறட்சி பகுதிகளான சங்கரன்கோவில், ஓட்டப்பிடாரம் போன்ற பகுதிகளில் புதிய கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டுசெல்லவேண்டும்.

மேட்டூர் அணையில் இருந்து இந்த முறை போதுமான தண்ணீர் திறக்காததால் 4 லட்சம் ஏக்கரில் நடக்கவேண்டிய குறுவை நெல் சாகுடி ஒன்றரை ஏக்கரில் மட்டுமே சாகுபடி நடந்துள்ளது.

இதனால் 600 கோடி ரூபாய் மதிப்பிலான நெல் சாகுபடி பாதித்துள்ளது. அடுத்து 8 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி நடக்கவேண்டும். ஆனால் மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லை.எனவே தமிழக அரசு அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். தென்மாவட்டங்களில் வறட்சியை சமாளிக்கும் வகையில் புதிய நீர்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். தென்னக நதிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

***கள் இறக்க அனுமதி கோரி 3 ஆயிரம் தென்னை விவசாயிகள் தர்ணா போராட்டம்***

*கொழிஞ்சாம்பாறை,*

*செப்.17–*

*சித்தூர் தாலுகாவில் கள் இறக்க அனுமதி கோரி 3 ஆயிரம் தென்னை விவசாயிகள் தர்ணா போராட்டம் நடத்தினார்கள்.*

*கள் இறக்க தடை விதிப்பு*

*பாலக்காடு மாவட்டம், சித்தூர் தாலுகாவில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் உள்ளனர். இவர்களது தென்னை தோப்புகளில் கள் இறக்கும் தொழிலாளிகளாக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணிபுரிந்து வருகிறார்கள்.*

*இந்த நிலையில் மலப்புரம் மாவட்டம் குட்டிப்புரத்தில் விஷ கள் சாப்பிட்டு 27 பேர் இறந்து போனார்கள். இதை தொடர்ந்து விசாரணை நடத்தியதில் சித்தூர் தாலுகாவில் இருந்து வந்த கள் சாப்பிட்டு தான் 27 பேரும் இறந்து போனது தெரிய வந்தது. இதை தொடர்ந்து சித்தூர் தாலுகாவில் கள் இறக்க அரசு தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது.*

*விவசாயிகள் தர்ணா போராட்டம்*

*அரசின் இந்த உத்தரவால் சித்தூர் பகுதியை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இருந்த போதிலும் கள் இறக்காவிட்டால் தென்னை மரம் அழுகி விடும் என்பதால் தினமும் கள் இறக்கி அதை வீணாக மண்ணில் கொட்டி வருகிறார்கள்.*


*இதை தொடர்ந்து சித்தூர் பகுதியை சேர்ந்த 3 ஆயிரம் விவசாயிகள் மதுவிலக்கு துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தர்ணா போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்தை எருத்தேன்பதி முன்னாள் பஞ்சாயத்து தலைவர் அருணாசல கவுண்டர்*

தொடங்கி வைத்தார். சித்தூர் தாலுகா விவசாய பாதுகாப்பு சங்க செயலாளர் மலக்காடு ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நீலங்காட்சி ரத்தினசாமி வரவேற்று பேசினார்.

கலந்து கொண்டவர்கள்

இந்த தர்ணா போராட்டத்தில் கொழிஞ்சாம்பாறை கிராம பஞ்சாயத்து தலைவர் தணிகாசலம், யு.டி.எப். தலைவர் கோபால்சாமி, ஆர்.வி.பி.புதூர் சம்பத்குமார், மீனாட்சிபுரம் சுப்பையா கவுண்டர், கல்யாண சுந்தரம், செல்லமுத்து, பழனிசாமி, ரகுநாதன், புத்தன்வீடு சுரேஷ், சண்முகம், சச்சிதானந்த கோபாலகிருஷ்ணன், கோபாலபுரம் பொன்னுசாமி, கே.எம்.கருணன், சுபேஷ், ராதாகிருஷ்ணன், பிரவீன், சதீஷ் உள்பட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டார்கள். கள் இறக்க அனுமதி வழங்க கோரி பல்வேறு கோஷங்களை எழுப்பினார்கள்.

**இந்திய உணவு கழகம் தகவல் மத்திய அரசின் கையிருப்பில் 5 கோடி டன் உணவு தானியம்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு செப்டம்பர் மாதம் 1–ந் தேதி நிலவரப்படி மத்திய அரசின் சேமிப்பு கிடங்குகளில் 5.02 கோடி டன் உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளதாக இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது.

நெல்

இந்திய உணவு கழகம், மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கு இணங்க, உணவு தானியங்களை

கையிருப்பில் வைத்து தேவைப்படும் போது விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. செப்டம்பர் 1–ந் தேதி நிலவரப்படி 2.04 கோடி டன் நெல்லும், 2.98 கோடி டன் கோதுமையும் கையிருப்பில் உள்ளதாக இந்திய உணவு கழகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் விதிமுறைகளின் கீழ், அக்டோபர் 1–ந் தேதி வரையிலுமாக இந்திய உணவு கழகம் 2.62 கோடி டன் கோதுமை மற்றும் அரிசியை தயார் நிலையில் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். இதில், அவசர தேவைக்காக இருப்பு வைக்கும் 50 லட்சம் டன் தானியங்களும் அடங்கும். இதன்படி, 30 லட்சம் டன் கோதுமையையும், 20 லட்சம் டன் நெல்லையையும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும்.

கோதுமை

உள்நாட்டில் கோதுமை மற்றும் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட கூடாது என்ற அடிப்படையில் மத்திய அரசு கோதுமை மற்றும் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மத்திய அரசு, குறிப்பிட்ட அளவிற்கான கோதுமையையும், அரிசியையும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். இதன் காரணமாகவே கோதுமை மற்றும் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 15.10%–ஆக உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், செப்டம்பர் 4–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 15.10 சதவீதமாக அதிகரித்துள்ளது. இப்பணவீக்க விகிதம், புதிய கணக்கீட்டின்படி 2004–05–ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கும் முந்தைய வாரத்தில், 1993–94–ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு

பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 11.47 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், சென்ற ஆண்டின் இதே வாரத்துடன் ஒப்பிடும்போது, பருப்பு வகைகள் (6.10%), அரிசி (5.74%) மற்றும் கோதுமை (10.16%) ஆகியவற்றின் விலை மிகவும் அதிகரித்திருந்தது.
மேலும், பால் (23.41%), பழங்கள் (8.27%), காய்கறிகள் (3.82%) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.
இருப்பினும், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலை, இதே காலத்தில் முறையே 45.92 சதவீதம் மற்றும் 4.17 சதவீதம் குறைந்திருந்தது.
புதிய கணக்கீட்டின்படி, மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையிலான நாட்டின் பொது பணவீக்க விகிதம் சென்ற ஆகஸ்டு மாதத்தில் 8.5 சதவீதமாக இருந்தது.

**கிராமப்புறங்களில் விவசாயத்தை மேம்படுத்த வேளாண் தொழில்நுட்பங்களை ஊராட்சி தலைவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் துணைவேந்தர் முருகேசபூபதி பேச்சு**

கோவை,செப்.17–
கிராமப்புறங்களில் விவசாயத்தை மேம்படுத்த வேளாண் தொழில்நுட்பங்கள், திட்டங்கள் பற்றி ஊராட்சி தலைவர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்று விவசாய பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேச பூபதி கூறினார்.
கலந்துரையாடல்
கோவை வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் சார்பில் ஊராட்சி மன்றங்களின் வேளாண் வளர்ச்சி திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் கூட்டம் பல்கலைக்கழகத்தில் நேற்று காலை நடந்தது. வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மைய இயக்குனர் அஜ்ஜன் வரவேற்று பேசினார்.
வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேச பூபதி தலைமை தாங்கி பேசியதாவது:–
நம் நாடு சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில் மக்கள்தொகை 30 கோடியாக இருந்தது. அப்போது உணவு உற்பத்தி 53 மில்லியன் டன்னாக இருந்தது. இது பற்றாக்குறை என்பதால் அப்போது பசி, பட்டினி நிலவியது. அதையடுத்து உணவு உற்பத்தி செய்யும் நிலையில் நம் நாடு இருந்தது.
உணவு உற்பத்தியில் தன்னிறைவு
அதையடுத்து 1950–51–ம் ஆண்டு காலகட்டத்தில் 70 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி இருந்தனர். இந்த நிலையில் 3–வது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன்பிறகு நம் நாடு விவசாயத்தில் வளர்ச்சி பெற ஆரம்பித்தது. இப்போது நம் நாட்டின் மக்கள்தொகை 113 கோடி. 234 மில்லியன் டன் உணவு உற்பத்தி செய்து நாம் தன்னிறைவை அடைந்திருக்கிறோம். ஆனால் அதை எவ்வாறு நீடிப்பது, உற்பத்தியை அதிகரிப்பது என்பதே இப்போதையே கேள்வியாக இருக்கிறது. நாளுக்கு நாள் விவசாய

சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே போகிறது. ஆனால் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. அதனால் குறைந்த நிலத்தில் அதிக சாகுபடி செய்யவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். 2050–ம் ஆண்டில் இந்தியாவின் மக்கள்தொகை சீனாவை மிஞ்சிவிடும். அப்போது அதிக அளவில் உணவு உற்பத்தி செய்யவேண்டியிருக்கும்.

புதிய தொழில்நுட்பங்கள்

அதற்காக வேளாண்மை பல்கலைக்கழகம் பல புதிய ரகங்கள், தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. 749 புதிய ரகம், 143 பண்ணைக்கருவிகள், மேலாண்மை தொழில்நுட்பங்கள், செம்மை நெல் சாகுபடி, செம்மை கரும்பு சாகுபடி, துல்லிய பண்ணையம், சொட்டுநீர்பாசனம் உள்பட பல்வேறு புதியனவற்றை அறிமுகம் செய்து இருக்கிறோம். தமிழகத்தில் 80 லட்சம் விவசாய குடும்பங்கள் உள்ளன. அனைத்து விவசாயிகளையும் விவசாய விஞ்ஞானிகள் அனைவரும் சந்திக்க முடியாது. அதனால்தான் கிராமங்களில் ஊராட்சி தலைவர்கள் விவசாயிகளை சந்தித்து அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள், பயிற்சிகள் வழங்கவேண்டும். அதற்காக ஊராட்சி தலைவர்கள் வேளாண் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவேண்டும். திட்டங்களை செயல்படுத்தும்போது ஊராட்சி தலைவர்களின் பங்கு அதிக அளவில் இருக்கவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் திண்டுக்கல் காந்திகிராம் பல்கலைக்கழக பேராசிரியர் பழனிதுரை வாழ்த்தி பேசும்போது கூறியதாவது:–

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டில் கிராம பஞ்சாயத்து வளர்ச்சிக்கு ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. 309 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. அதேபோல் 58 துறைகள் விவசாய மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகின்றன. இதை கிராமப்புறங்களில் சரியாக பயன்படுத்திக்கொள்ள ஊராட்சி தலைவர்கள் மிகுந்த ஊக்கத்தோடு பணியாற்ற வேண்டும். அனைத்து துறையிலும் விவசாய வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஒதுக்கப்படும் நிதி உள்பட பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் கோவை வேளாண்மை பல்கலைக்கழக திட்டமிடுதல் இயக்குனர் சிவசுப்பிரமணியம் உள்பட ஊராட்சி தலைவர்கள், துணைத்தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் கோவை வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் வெங்கட்ராம் நன்றி கூறினார்.

**கூடலூரில் காலம் தவறி பெய்து வரும் மழையால் குறுமிளகு விளைச்சல் கடும் பாதிப்பு விவசாயிகள் கவலை**



கூடலூரர் பகுதியில் காலம் தவறி மழை பெய்வதால் குறுமிளகு செடிகளில் குறைந்தளவு காய்கள் காய்த்துள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர், செப்.17–

கூடலூரில் காலம் தவறி பரவலாக மழை பெய்து வருவதால் பணப் பயிரான குறுமிளகு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் குறுமிளகு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

போதிய மழை இல்லாமல்

கூடலூர் பகுதியில் ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தென் மேற்கு பருவமழை பெய்வது வழக்கம். காடுகளின் பரப் பளவு குறைந்து கொண்டே வருவதால் சராசரியாக மழையின் அளவும் குறைந்து கொண்டே வருகிறது. இந்தியாவின் 2–வது சிரபுஞ்சி என்றழைக்கக்கூடிய கூடலூர் தேவாலா, படிப்படியாக அதன் சிறப்பை இழந்து வருகிறது. வழக்கம் போல் இந்த ஆண்டும் நல்ல மழை பெய்யும் என எதிர்பார்த்திருந்த வேளை யில் ஜூன், ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்ய வில்லை. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் பணப் பயிரான ஏலக்காய், கிராம்பு, குறுமிளகு, இஞ்சி உள்ளிட்ட பணப்பயிர்கள் ஆயிரக் கணக் கான ஏக்கரில் விளைவிக்கப் படுகின்றன.

காலம் தவறிய மழை

நல்ல மழை பெய்தால் மட்டுமே பணப்பயிர்களின் விளைச்சலும் அதிகரிக்கும். ஆனால் இந்த ஆண்டு குறிப்பிட்ட மாதங்களில் மழை பெய்யாமல் காலம் தவறி தற் போது பரவலாக மழை பெய்து வருகிறது.

ஜூன், ஜூலை மாதங்களில் நல்ல மழை பெய் தால் மட்டுமே குறுமிளகு விளைச்சல் அதி கரிக்கும். ஆனால் இந்த ஆண்டு குறிப் பிட்ட மாதங்களில் மழை பெய்யாததால் குறுமிளகு காய்கள் செடிகளில் போதிய அளவு காய்க்க வில்லை.

ஏற்கனவே தேயிலைக்கு விலை குறைந்து வருகின்ற நிலையில் குறுமிளகு விளைச் சலில் நல்ல லாபம் பெறலாம் என எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு குறுமிளகு விளைச்சல் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

விவசாயிகள் கவலை

கூடலூர் பகுதியில் குறு மிளகு செடிகளில் குறைந்த அளவே காய்கள் காய்த்துள்ள தால் வரும் காலங்களில் குறு மிளகு விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காலம் தவறி மழையால் தேயி லையில் கொப்புள நோய், இஞ்சி பயிரில் அழுகல் நோய், குறுமிளகு விளைச்சல் பாதிப்பு என விவசாயிகள் தொடர் இழப்பை சந்தித்து வருகின்ற னர்.

இதனால் நம்பிக்கையோடு செய்த விவசாயத்தில் பொரு ளாதார சரிவை சந்தித்து வரு வதால் விவசாயிகள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது.

### இஞ்சியுடன் ஊடுபயிராக பீன்ஸ் பயிரிடுவதில் கூடலூர் பகுதி விவசாயிகள் ஆர்வம்



கூடலூரில் இஞ்சி செடிகளுடன், ஊடுபயிராக பீன்ஸ் செடிகள் பயிரிட்டுள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர்,செப்.17–

இஞ்சியுடன் ஊடுபயிராக பீன்ஸ் பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

மலைப்பிரதேச காய்கறிகள்

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் காலிபிளவர், உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், காரட், பீட்ரூட் உள்ளிட்ட மலைப்பிரதேச காய்கறிகள் ஏக்கர் கணக்கில்

விளைவிக்கப்படுகின்றன. இதேபோல் கூடலூர் பகுதியில் காரட், பீட்ரூட், உருளைக் கிழங்கு தவிர இதர மலைப்பிரதேச காய்கறிகளும், சமவெளி பிரதேச காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன.

இதேபோல் காபி, ஏலக்காய், இஞ்சி, குறுமிளகு, கிராம்பு உள்ளிட்ட பணப்பயிர்கள் கூடலூர் பகுதியில் ஆயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவில் விளைவிக்கப்படுகின்றன. பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் கூட லூரில் பெரும்பாலான விவசாயிகள் காய்கறிகள் பயிரிடுவதில் கவனம் செலுத்த தொடங்கினர்.

வழக்கமாக மே மாத இறுதியில் தென்மேற்கு பருவ மழை தொடங்கி விடுவதால் இஞ்சி பயிரிடுவதில் விவசாயி கள் கவனம் செலுத்த தொடங் குவர்.

ஊடுபயிராக பீன்ஸ் செடிகள்

6 மாத விளைச்சலுக்கு பின்பு இஞ்சி அறுவடை செய்யப்படுகிறது. இதன் இடைப்பட்ட காலங்களில் கூடுதல் பொருளாதாரம் பெற இஞ்சியுடன் ஊடுபயிராக பீன்ஸ் செடிகளை கூடலூர் விவசாயிகள் பயிரிட்டுள்ள னர். பயிரிட்டு 45 நாட்களுக்கு பிறகு பீன்ஸ் செடிகள் நன்கு விளைச்சல் காணுவதால் கூடு தல் வருமானத்தை கூடலூர் விவசாயிகள் பெறுகின்றனர். மேலும் 6 மாத காலத்திற்கு பிறகும் நன்கு விளைந்த இஞ்சி பயிர்களை அறுவடை செய் யாமல் நல்ல விலை கிடைக்கக் கூடிய காலங்களில் இஞ்சியை விவசாயிகள் அறுவடை செய்து நல்ல லாபம் பெறவும் முனைந்துள்ளனர். ஒரு பயிரை மட்டும் விவசாயம் செய்து பலனை எதிர்பார்க் காமல் அதன்கூடவே மற் றொரு பயிர்களையும் விவ சாயம் செய்து பலனை பெறு வதில் கூடலூர் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**சிறு விவசாயிகளுக்கான மேம்பாட்டு குழு அமைக்க வேண்டும் மத்திய வர்த்தக துறை கூடுதல் செயலாளருக்கு விவசாயிகள் மனு**

குன்னூர், செப்.17–

சிறுவிவசாயிகளுக்கான மேம்பாட்டு குழு அமைக்க வேண்டும் என்று மத்திய வர்த்தக துறை கூடுதல் செயலாளரிடம் மனு கொடுக்கப்பட்டது.

மனு

உபாசி என்றழைக்கப்படும் தென்னிந்திய தோட்ட தொழில் அதிபர்கள் சங்கத்தின் 117–வது ஆண்டு மாநாடு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மத்திய வர்த்தக துறை கூடுதுல் செயலாளர் மங்கோத்ரா கலந்து கொண்டார்.

கூடுதல் செயலாளர் மங்கோத்ராவிடம் சிறு விவசாயிகள் சங்க உறுப்பின ரும், உபாசி உறுப்பினருமான ராமன் மனு ஒன்றை சிறு விவசாயிகள் சார்பில் கொடுத்தார். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:–

மத்திய அரசின் தேயிலை வாரியம் மூலம் தேயிலை விலை பகிர்வு திட்டத்தை அறிவிக்கப்பட்டு

உள்ளது. இந்த விலை பகிர்வு திட்டம் சரியான முறையில் தொழிற் சாலைகள் கடை பிடித்து வருகிறதா? என்பதை குன்னூரில் உள்ள தேயிலை வாரிய அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.

நலன் பாதுகாக்கப்பட வேண்டும்

சிறு தேயிலை விவசாயிகள் விலை வீழ்ச்சி மற்றும் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கி தவிக்கின்றனர். இந்த பிரச் சினைகளை போக்குவதற் காக உடனடியாக சிறு விவ சாயிகளுக்கான மேம்பாட்டு குழுவை அமைக்க வேண்டும். இந்த குழு மூலம் சிறு தேயிலை விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட வேண் டும்.

இதுமட்டுமின்றி சிறு விவசாயிகள் 5 ஏக்கருக்குள் வைத்து இருக்க வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும். சிறு தேயிலை விவசாயிகளின் குழந்தை களுக்கான கல்வி சலுகைகள், மதிப்பெண்கள் அடிப்படை யில் இல்லாமல் விவசாயி களின் வருமானத்தை கொண்டு வழங்க வேண்டும்.

கூடுதல் விலை

தற்போது விலை நிலைப் பாடு நிதி திட்டத்தின் கீழ் இன்சூரன்ஸ் திட்டம் மட்டுமே சிறு தேயிலை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. ஆனால் தேயிலை விலை வீழ்ச்சி காலத்திலும் பருவ மழை தவறும் பட்சத் திலும் சிறு தேயிலை விவசாயி கள் பயன்பெறும் வகையில் விலை அதிகரித்து தரும் திட் டத்தை மத்திய அரசு அறி முகப்படுத்த முன்வர வேண் டும்.

அவ்வாறு அறிவிக்கப்படும் பட்சத்தில் பச்சை தேயிலை யின் விலை கூடுதலாக கிடைத்து, தோட்டத்தை பராமரிக்க ஏதுவாக இருக்கும். தேயிலை தொழிற்சாலை களின் உரிமம் புதுப்பிக்கப் படும் போது, தேயிலை வாரியத்தின் மூலம் எந்திரங்கள் நல்லமுறையில் உள்ளதா? சுற்றுச்சூழல் பாதிக்கப்படா மல் உள்ளதா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

மானியம் வழங்க ஏற்பாடு

புதிய தொழில்நுட்ப முறையில் தேயிலை தூள் தயாரிப்பதற்கான உத்தியை படிப்படியாக தொழிற்சாலை களில் நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். இதற்காக தேயிலை வாரியம் மூலம் தேயிலை தொழிற் சாலைகளுக்கு மானியம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தேயிலை சந்தைப்படுத்தும் முறையில் உபாசி தனி கவனம் செலுத்த வேண்டும். தேநீர் பருகுவதால் ஏற்படும் நன்மை கள் குறித்து பொது மக்க ளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கிரீன்டீ, லெமன் டீ போன்றவை உடல் நலத்துக்கு நன்னை உண்டாக் குவதால் இந்த தேயிலையின் தன்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த முன்வர வேண் டும்.

ஏற்றுமதி

தேயிலை தூளின் உள்நாட்டு பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலக வர்த்தக அமைப்பின் கொள்கைபடி இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு தேயிலை தூளை இந்திய தேயிலை தூளுடன் கலந்து ஏற்றுமதி செய்யக்கூடாது. நேரடியாக இந்திய

தேயிலையை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.



# நீலகிரி பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய பரிசீலனை

## மு.க.ஸ்டாலின் பேட்டி

ஊட்டி, செப்.17–

நீலகிரி பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய பரிசீலனை செய்யப்படும் என்று துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

### மு.க.ஸ்டாலின் பேட்டி

ஊட்டி ஹில்பங்க் பகுதியில் நீலகிரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மத்திய மந்திரியுமான ஆ.ராசாவின் அலுவலகத்தை மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:–

கேள்வி: ஊட்டியில் கட்டப்பட்டுள்ள விதிமுறை மீறிய கட்டிடங்கள் வரைமுறைப்படுத்தப்படுமா?

பதில்: விதிமுறை மீறிய கட்டிடங்கள் தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் உள்ளது.

### விலை நிர்ணயிக்க பரிசீலனை

கேள்வி: ஊட்டியில் இருந்து தலைகுந்தா வழியாக முதுமலை செல்லும் கல்லட்டி மலைப்பாதையில் இரவு போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது. இதனை திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

பதில்: இது தொடர்பான வழக்கு கோர்ட்டில் உள்ளது. இந்த வழக்கில் தமிழக அரசை சேர்க்க கோர்ட்டில் முறையீடு செய்யப்பட உள்ளது.

கேள்வி: நீலகிரி மாவட்ட பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா?

பதில்: நீலகிரி பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய பரிசீலிக்கப்படும்.

கேள்வி: கூடலூர் செக்சன் 17 நிலப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமா?

பதில்: செக்சன் 17 நிலப்பிரச்சினை சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கி உள்ளது. தீர்ப்பின் விவரம் கிடைத்த பிறகு ஆலோசிக்கப்படும்.

### பொற்கால ஆட்சி

கேள்வி: துணை முதல்–அமைச்சராக இருக்கும் தங்களின் எதிர்கால கனவு என்ன?

பதில்: தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சி நடைபெற்று வருகிறது. மீண்டும் ஆட்சி அமைந்தால் நல்லத்திட்டங்கள் மக்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.